# ஆற்றாது அழும் குடும்பங்களின் வேதனையில் அரசியல் நடத்த எண்ணாதீர்!

'கள்ளச்சாராயம் குடித்து விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 15-க்கும் மேற்பட்டோர் சாவுக்குப் பொறுப்பேற்று முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும்' என்று எடப்பாடி பழனிச்சாமி கூறியுள்ளார்! பி.ஜே.பி. வானதி சீனிவாசன், 'தி.மு.க. அரசும் போலி சும்தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்' என்றுள்ளார்!

நாட்டில் நடந்துவிட்ட ஒரு சோகச் சம்பவத்தை வைத்து அதற்காக வருந்தாமல், சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறாமல், அதிலே இவர்கள் அரசியல் நடத்த நினைக்கும் வேளையில் தமிழ்நாட்டு முதல்வர், சோகத்தில் வாடும் அந்தக் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் வழங்கிடி ஓடோடிச் சென்றுஅவர்களைச்சந்தித்துள்ளார்.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளித்ததோடு மட்டுமின்றி, இந்தக் கொடும் இழப்புக்குக் காரணமானவர்கள்மீது கடும் நடவடிக்கைகள் எடுக்க அடுத்தடுத்த உத்தரவுகள் பறக்கின்றன! சி.பி.சி. ஐ.டி விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

முதல்வர் வாக்கு கேட்க மட்டும் மக்களிடம் செல்லவில்லை, எப்போதும் அவர்கள் துயரோடு, தன்னை இணைத்துக் கொள்கிறார்... அவர்களது சுக துக்கங்களில் பங்கேற்கிறார்.

மேலும் இதுபோன்ற துயரங்கள் தொடராமல் இருக்க தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்.

எடப்பாடி பழனிச்சாமிக்கு அறிவு 'கட்டை' என்றுதான் எண்ணினோம்; நினைவாற்றலிலும் அவர் சூன்யம்தான் என்பதை அவரே பறைசாற்றிக் கொண்டுள்ளார்.

என்னவோ தமிழ்நாட்டில் இன்றைய தி.மு.கழக ஆட்சியில்தான் கள்ளச்சாராய சாவு நடந்துவிட்டது போல பேசும் எடப்பாடி, அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சராக இருந்தவர்,



தவழ்ந்துபோய் காலில் எல்லாம் விழுந்து முதலமைச்சர் பதவி பெற்றும் இருந்தவர்!

**2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சாட்சாத் அம்மையார் ஜெயலலிதா தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த காலத்தில், பண்ருட்டியில் கள்ளச் சாராயத்துக்கு 52 பேர் பலியாகினர். 200 க்கு மேற்பட்டோர் வாழ்க்கையோடு போராடினர். 30க்கு மேற்பட்டோர் தங்களது கண் பார்வையைப் பறிகொடுத்தனர். ஆரம்ப கட்டச் செய்தியில் 52 பேர் பலியானதாகக் கூறப்பட்டது. பின்னர் சாவு எண்ணிக்கை அதிகரித்ததே...**

**அப்போது ஜெயலலிதா ராஜினாமா செய்தாரா? அப்போது எடப்பாடி; அம்மையார் ராஜினாமா செய்யாததைக் கண்டித்தாரா?**

இந்த நிகழ்வு நடந்தது 2001 டிசம்பர் மாதம் என்றால் அதே ஆண்டு நவம்பர் 27 ஆம் தேதி காஞ்சிபுரம் அருகே கள்ளச் சாராயம் குடித்து மூன்று பேர் இறந்ததாகச் செய்திவந்தபின்னும், அதே ஆண்டு அக்டோபர் முதல் வாரம் சென்னை ரெட்ஹில்ஸ் அருகே உள்ள கோட்டூர் கிராமத்தில் 30 பேர் கள்ளச்சாராயம் அருந்தி உயிர் நீத்த தகவல்கள் வந்தபின்னும் ஜெயலலிதா அரசு தூங்கியதால் இந்தச் சம்பவங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்கதை



களாக உருவெடுத்த போதெல்லாம் எடப்பாடி எங்கே மேயப் போயிருந்தார்?

திருமதி. வானதி சீனிவாசன், கொஞ்சம் தெளிவுள்ள அரசியல்வாதி என எண்ணியிருந்தோம்; அப்படி எல்லாம் என்னைப் பற்றி தப்புக் கணக்கு போட்டு விடாதீர்கள் எனச் சொல்லாமல் சொல்கிறார்.

தமிழ்நாட்டில் இப்போது நடந்துவிட்ட சம்பவம், நடந்திருக்கக் கூடாது தான்; அது மேலும் பரவாது நடக்க உடனடி நடவடிக்கைகள் அசுர வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

அம்மையாரின் பா.ஜ.க. ஆளும் குஜராத் மாநிலமும் கள்ளச் சாராய சாவுகளுக்கு விதி விலக்கல்ல; சமீபத்தில் குஜராத்தின் போடாட் மாநிலத்தில் ரோஜிட் மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் ஒரு ஞாயிற்றுக்கிழமை இரவு கள்ளச்சாராயம் குடித்த பலருக்க் உடல் நலக் குறைவு ஏற்பட்டு, 40 பேர் வரை உயிரிழந்தும் 97 பேர் வரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த செய்திகள் எல்லாம் வந்தனவே! மோடியும், அமித்ஷாவும் ஜனித்த பூமி மட்டுமின்றி, அவர்கள் பல காலம் ஆட்சி புரிந்தது மட்டுமின்றி இப்போதும் அவர்கள் மேற்பார்வையிலான ஆட்சிதானே அங்கு நடைபெறுகிறது.

குஜராத் அரசும், மோடியும், அமித் ஷாவும்தான் குஜராத்தில் நடந்த அந்த 40 பேர் சாவுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று அன்று அறிக்கை விட்டாரா அம்மையார்?


**இந்தியாவில் அதாவது பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் ஆளுகின்ற இந்தியாவில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆண்டுவரை ஏறத்தாழ 6000 பேர் கள்ளச் சாராயத்துக்குப் பலியாகியுள்ளனர். இந்தத் தகவல் 2022 ஜூலை 19 ஆம் தேதி வெளியான மக்களவையின் தகவலில் வெளி வந்த விபரம். இது நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பி.ஜே.பி. ஆளும் பல மாநிலங்கள் உட்பட நடந்த கள்ளச் சாராய சாவுகளின் மொத்த எண்ணிக்கை!**

**இந்த கள்ளச் சாராயச் சாவுகளுக்கு பிரதமர், உள்துறை அமைச்சர், பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று வானதி கூறுவாரா?**

அம்மையார் அரைக்கால் வேக்காட்டு அரசியல்வாதி அண்ணாமலை போல அவசரப்பட்டு அறிக்கை விடுவதை இனியாவது நிறுத்திக்கொள்வது நலம்!

நடந்துவிட்ட துயரச் சம்பவம் எதிர்பாராமல் நடந்துவிட்டாலும், இது நடக்கக் காரணமானவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை தமிழக முதல்வர் தளபதி ஸ்டாலின் எடுத்துள்ளது மட்டுமின்றி, துயரத்தில் ஆழ்ந்துள்ள குடும்பங்களுக்கு உடனடியாக தானே நேரில் சென்று ஆறுதல் கூறியுள்ளார்.

முதல்வரைப் பாராட்ட வேண்டாம்; ஆற்றாது அழும் அந்தக் குடும்பங்களின் வேதனையில் அரசியல் நடத்தி ஆதாயம் தேடும் போக்கினை நிறுத்திக் கொள்ளுங்கள்.



## முதல்வர் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

மேலும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கக் கூடியவர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 50 ஆயிரம் நிதியுதவியும் வழங்கப்பட்டிருக்கிறது.

**கைது நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது!**

இந்தச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளது மட்டுமின்றி, இதற்கு காரணமானவர்கள் அனைவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

இது தவிர தொழிற்சாலைகளில் பயன்படுத்தக்கூடிய மூலப் பொருட்கள் இத்தகைய கள்ளச் சாராய நிகழ்வுகளில் பயன்படுத்தப்படுவதை முழுமையாக தடுத்திடும் பொருட்டு, இப்பிரச்சினையின் மூலக் காரணத்தை கண்டுபிடித்து ஒழித்திட ஏதுவாக, இந்த இரு சம்பவங்கள் குறித்த விசாரணை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்படும்.

மேலும் கள்ளச் சாராய விற்பனையை முழுமையாக தடுத்திட வேண்டும்என்ற அரசின் கடுமையான உத்தரவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமல், கள்ளச் சாராய விற்பனையை கண்காணிக்க தவறியவர்கள் மீதும் இந்த அரசு தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செய்தியாளர் :** *எத்தனை பேர் இறந்திருக்கிறார்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** நான் முதலியேயே சொல்லி விட்டேன். 9 பேர் இங்கு இறந்திருக்கிறார்கள். செங்கல்பட்டில் 5 பேர் இறந்திருக்கிறார்கள். 7 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். 40 பேர் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். ஜிப்மரில் 3 பேரும் புதுச்சேரி அரசு மருத்துவமனையில் ஒருவரும் சிகிச்சை பெற்று கொண்டிருக்கிறார்.

**உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது!**

**செய்தியாளர் :** *உரிய சிகிச்சை அளிக்கப்படாது உயிரிழப்பு அதிகரிக்க காரணம் என்று உறவினர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். வெறும் குளுகோஸ் மட்டும்தான் ஏற்றுகிறார்கள் என்கிறார்களே?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** அவர்கள் பதட்டத்தில் சொல்கிறார்களே தவிர, உரிய சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கிறார்கள். சில பேருக்கு டிரிப்ஸ் ஏற்ற வேண்டும். அதற்கு பிறகுதான் மருந்து மாத்திரைகள் கொடுக்க வேண்டும். இதில் சில முறைகள் இருக்கிறது. அதனால் மருத்துவ ரீதியாக செய்துக்கொண்டிருக்கிறார்கள். நன்றாக விசாரித்து விட்டேன். நீங்கள் சொன்னது போல் ஒருவர், இரண்டு பேர் புகார் செய்தார்கள். அது உண்மையல்ல,

**செய்தியாளர் :** *எந்த மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படும்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கடுமையான நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

## மொக்கா புயலால் மியான்மரில் கடும் பாதிப்பு!

*ரக்கைன், மே 17 -*

*மொக்கா புயலினால் மியான்மரின் துறைமுக நகரம் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. மேலும் புயலினால் நாட்டின் தகவல் தொலை தொடர்பு சேவை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய அதி தீவிர புயல் 'மொக்கா' (மே 14) அன்று தென்கிழக்கு வங்கதேசம் மற்றும் வடக்கு மியான்மர் கடற்கரையை அதி தீவிரப் புயலாகக் கடந்தது. அப்போது அதிகபட்சமாக மணிக்கு 210 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசியது.*

*மொக்கா புயலினால் வங்கதேசம் மற்றும் மியான்மர் கடும் தேசத்தை எதிர்கொண்டுள்ளன. இதில் மியான்மரே மொக்கா புயலினால் நேரடி பாதிப்பை சந்தித்துள்ளது. மணிக்கு 210 கிமீ வேகத்தில் வீசிய காற்றினால் மியான்மரில் செல்போன் டவர்கள், வீடுகளின் கூரைகள் என அனைத்தும் காற்றில் தூக்கி வீசப்பட்டன. குறிப்பாக மியான்மர் துறைமுக நகரமான சிட்வே, தலைநகர் ரக்கைன் மொக்கா புயலினால் கடும் சேதத்தை சந்தித்துள்ளன. புயலினால் பெய்த மழையினால் பல இடங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. புயலினால் மியான்மரில் தகவல் தொலை தொடர்பு சேவை பாதிக்கப்பட்டுள்ளது. தலைநகர் ரக்கைன் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது என்று மியான்மர் ராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## கள்ளச்சாராயம்: அதிகாரிகளுடன் முதல்வர் ஆலோசனை... முதல் பக்கத் தொடர்ச்சி

குறித்து மேற்கொள்ள வேண்டிய நட வடிக்கைகள் குறித்து ஆலோசனைகளை மேற்கொண்டார்.

**செங்கல்பட்டில் பலியானவர்களுக்கு ரூ.10 லட்சம் நிதி!**

இதற்கிடையே செங்கல்பட்டு மாவட்டத்தில் கள்ளச் சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அது வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், சித்தாமூர் குறுவட்டம், பெருங்கரணை கிராமத்தைச் சேர்ந்த திருமதி.வசந்தா, க/பெ.ராஜா (வயது 50), சின்னத்தம்பி, த/பெ. செல்வம் (வயது 35), மாரியப்பன்

த/பெ. வீராசாமி, செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், சித்தாமூர் குறுவட்டம் பேரம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த வள்ளியப்பன் (வயது 65) மற்றும் திருமதி.சந்திரா, க/பெ. வள்ளியப்பன் (வயது 60) ஆகியோர் கள்ளச்சாராயம் அருந்தியதால் உடல்நலம் பாதிக்கப்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன்.

**காவல்துறை அதிகாரிகள் பணி நீக்கம்!**

இச்சம்பவம் நடைபெற்ற பகுதியைச் சேர்ந்த மேல்மருவத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் பிரேம் ஆனந்த், சித்தாமூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மோகனசுந்தரம், மதுராந்தகம் காவல் நிலைய மதுவிலக்கு அமல்பிரிவு உதவி ஆய்வாளர் ரமேஷ் ஆகியோர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் கள்ளச்சாராயம் விற்பனை செய்த குற்றவாளிகள் மூன்றுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்திட அறிவுறுத்தியுள்ளதோடு பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னதாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா பத்து இலட்சம் ரூபாயும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்துவழங்கவும்உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### திருச்சி வடக்கு – உப்பிலியாபுரத்தில்

## திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### சே.ஸ்டாலின் குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு! கே.வி.இராமகிருஷ்ணன் சிறப்புரை!

*திருச்சி, மே 17-*

*தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருச்சி வடக்கு மாவட்டம் ஒப்பிலியபுரம் வடக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் 8.05.2023 மாலை 6.00 மணி அளவில் மங்கப்பட்டி புதூரில் ஒன்றியச் செயலாளர் ந.முத்துச் செல்வன் தலைமையில் நடைபெற்றது.*

*உப்பிலியபுரம் பேரூர்க் கழகச் செயலாளர் என். நடராசன் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் துறையூர் சட்டப் பேரவை உறுப்பினர் சே. ஸ்டாலின் குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு. தமிழ்மாறன், உப்பிலியாபுரம் வடக்கு ஒன்றியசெயலாளர் அர. ந. அசோகன் மற்றும் ஒன்றியக் கழக பேரூர்க் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் பேசிய பின் தலைமைக் கழகச் சொற்பொழிவாளர் கே.வி. இராமகிருட்டினன் சிறப்புரை ஆற்றினார். உப்பிலியாபுரம் ஒன்றியம் பொருளாளர் ஏ. பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.*